Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/5.5.2025/Script/

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—செங்கேணி பழனி

தேதி 5.5.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பஹல்காம் தீவிரவாத தாக்குதலின் பின்னணியில், பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், பாதுகாப்புத் துறை செயலர் திரு ராஜேஷ்குமார் சிங்-குடன் ஆலோசனை நடத்தி உள்ளார்.

வக்ஃபு திருத்த சட்டத்தின் அரசியல் சாசன செல்லுபடித் தன்மை பற்றிய வழக்கை, 15-ஆம் தேதி விசாரணைக்கு பட்டியலிட உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மறைந்த எழுத்தாளர் கவிகோ அப்துல் ரஹ்மான் உட்பட, 5 தமிழ் எழுத்தாளர்களின் நூல்களை, தமிழக அரசு, நாட்டுடமை ஆக்கியுள்ளது.

புதுச்சேரியில் பள்ளிக் கல்வித் துறை சார்பில், ஜவஹர் சிறுவர் இல்லம் மூலமாக நடைபெற்று வரும், கோடைக்கால இலவச சிறப்பு பயிற்சி வகுப்புகளில், சுமார் ஆயிரத்து 500 குழந்தைகள் பங்கேற்றுள்ளனர்.

மோடி-சந்திப்பு

தலைமை ராணுவ தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி, கடற்படைத் தலைவர் அட்மிரல் தினேஷ் திரிபாதி, விமானப் படை

தலைவர் ஏர்சீப் மார்ஷல், ஏபி சிங் ஆகியோர், பிரதமர் திரு நரேந்திர மோடியை தனித்தனியாக ஏற்கனவே சந்தித்துள்ள நிலையில், பாதுகாப்புத் துறை செயலர் திரு ராஜேஷ்குமார் சிங், இன்று பிரதமர் திரு நரேந்திர மோடியை, டெல்லியில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார். பஹல்காம் தீவிரவாத தாக்குதலின் பின்னணியில் இந்த சந்திப்புகள் நடத்தப்பட்டுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

*பாகிஸ்தான்-நீர்*

பஹல்காம் தீவிரவாத தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்கு எதிரான மற்றொரு கடும் நடவடிக்கையாக, பாக்லிஹார் அணை மூலமாக செனாப் நதியில் பாகிஸ்தானுக்கு நீர் வழங்குவதை இந்திய நிறுத்திக் கொண்டுள்ளது. சிந்து நதி மற்றும் அதன் கிளை நதிகள் மூலம் பாகிஸ்தானுக்கு ஒரு சொட்டு நீர் கூட அனுமதிக்க வேண்டாம் என்ற முடிவின் அடிப்படையில், ஜீலம் நதியில் உள்ள கிஷன்கங்கா அணையில் இருந்து பாகிஸ்தானுக்கு நீர் வழங்குவதை நிறுத்திக் கொள்ளவும் இந்தியா திட்டமிட்டு வருகிறது. வடக்கு காஷ்மீரில் உள்ள கிஷன்கங்கா அணையும், ஜம்மு கோட்டத்தின் ராம்பன் மாவட்டத்தில் உள்ள பாக்லிஹார் அணையும், பாகிஸ்தானுக்கு நீர் வழங்கும் நேரத்தையும் அளவையும் முறைப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிப்பதும் குறிப்பிடத் தக்கது.

வக்ஃபு சட்டம்

2025-ஆம் ஆண்டு வக்ஃபு திருத்த சட்டத்தின் அரசியல் சாசன செல்லுபடித் தன்மை பற்றிய வழக்கை, 15-ஆம் தேதி விசாரணைக்கு பட்டியலிட உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்து கூடுதல் விவரங்கள்...............

(வாய்ஸ்)

வக்ஃபு சட்டம்

(வாய்ஸ்)

உச்சநீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக வரும் 14-ஆம் தேதி பதவி ஏற்க உள்ள நீதிபதி திரு பிஆர் கவாய் தலைமையிலான அமர்வு, வக்ஃபு திருத்த சட்டத்தின் அரசியல் சாசன செல்லுபடித் தன்மை பற்றிய மனுக்களை மேற்கொண்டு விசாரிக்கும் என்று, தலைமை நீதிபதி திரு சஞ்ஜீவ் கன்னா, நீதிபதி திரு கே வி விஸ்வநாதன் ஆகியோர் அடங்கிய அமர்வு இன்று உத்தரவிட்டது. இந்த வழக்கு பற்றிய எதிர் மனுவை தாங்கள் ஆழமாக படிக்கவில்லை என்றும், வழக்கு விவரங்களை முழுமையாக படிக்க புதிய தலைமை நீதிபதிக்கு சிறிது அவகாசம் வழங்கத் தாம் விரும்புவதாகவும் தலைமை நீதிபதி திரு சஞ்ஜீவ் கன்னா கூறினார்.

பிஜேபி வக்ஃபு

வக்ஃபு திருத்த சட்டம் பற்றிய பிரச்சனையில், காங்கிரஸ், ஓட்டு வங்கி அரசியல் நடத்துவதாக, மூத்த பிஜேபி தலைவரும் மத்திய அமைச்சருமான திரு பூபேந்தர் யாதவ் குற்றம் சாட்டி உள்ளார். இன்று

புதுடெல்லியில் சிறுபான்மையின அறிஞர்கள் கூட்டத்தில் உரையாற்றிய அவர் சிறுபான்மையினரின் சமூக-பொருளாதார மற்றும் அரசியல் நீதியை உறுதிப்படுத்துவதே அரசின் நோக்கம் என்றும், வக்ஃபு திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட போது வலுவான கருத்து எதையும் காங்கிரஸ் வெளிப்படுத்தவில்லை என்றும், கூறினார்.

*பிஜேபி-கூட்டம்*

பாரதிய ஜனதா பொதுச் செயலர்கள் கூட்டம், கட்சி தலைவர் திரு ஜேபி நட்டா தலைமையில், புது டெல்லியில் உள்ள பிஜேபி தலைமையகத்தில் இன்று நடைபெற்றது. திரு அருண் சிங், திரு வினோத் தாவ்டே, திரு பிஎல் சந்தோஷ் உள்ளிட்ட பொதுச் செயலர்கள் கலந்து கொண்டஉ இக்கூட்டத்தில், பீகார் உள்ளிட்ட மாநிலங்களின் சட்டப்பேரவைத் தேர்தல்கள் மற்றும் கூட்டணி உத்தேசங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக, தகவல்கள் கூறுகின்றன.

*கட்கரி-தெலங்கானா*

மத்திய சாலை-போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி இன்று, தெலங்கானா மாநிலம் சிர்பூர் காகஸ்நகரில் நடைபெற்ற விழாவில் 3 ஆயிரத்து தொள்ளாயிரம் கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு சாலை மேம்பாட்டு திட்டங்களைத் தொடக்கி வைத்து வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். சாலை கட்டமைப்பை வலுப்படுத்தவும், விவசாயிகளுக்கு உதவும் வகையில்

நெடுஞ்சாலை ஓரமாக அம்ரித் சரோவர் குளங்களை அமைக்கவும் மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக அவர் தெரிவித்தார். போக்குவரத்து தேவைகளுக்கான நீர் வழிப் பாதையாக ஆறுகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். மத்திய நிலக்கரித் துறை அமைச்சர் திரு கிஷன்ரெட்டி, உள்துறை இணை அமைச்சர் திரு சஞ்சய் குமார் உள்ளிட்டவர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டனர். மத்திய அமைச்சர் திரு நிதின் கட்கரி, இன்று மாலை ஐதராபாத்தில் ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான வேறு பல திட்டங்களையும் தொடக்கி வைக்கிறார்.

*தன்கர்-காடு*

சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் கூடிய நீடித்த வளர்ச்சி என்பதே நாட்டிற்கு வழிகாட்டும் கொள்கையாக திகழ வேண்டும் என, குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் கூறி உள்ளார். இன்று கர்நாடகத்தின் உத்தர கன்னடா மாவட்டத்தில் உள்ள சிர்சி வனவளக் கல்லூரியில், மாணவர்களிடையே உரையாற்றிய அவர், வனப் பரப்பே, புவிக் கோளத்தின் சுவாசப் பை என்றும் பருவநிலை மாற்றத்தை புறக்கணித்தால், பெரும் அபாயங்களை சந்திக்க நேரும் என்றும் கூறினார். சிர்சி வனவளக் கல்லூரி மாணவர்கள் மேற்கு தொடர்ச்சி மலையின் சுற்றச்சூழல் பாதுகாவலர்களாக செயல்பட்டு வருவதை தாம் பாராட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார். நிகழ்ச்சியின் போது, தாயின்

பெயரில் ஒரு மரம் இயக்கத்தின் கீழ், குடியரசு துணைத் தலைவர், மரக் கன்று ஒன்றை நட்டு வைத்தார். குடியரசு துணைத் தலைவரின் துணைவியார் திருமதி சுதேஷ் தன்கர், கர்நாடக ஆளுநர் திரு தாவர்சந்த் கெலாட் உள்ளிட்டோர், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*நாட்டுடமை*

மறைந்த எழுத்தாளர் கவிகோ அப்துல் ரஹ்மான் உட்பட 5 தமிழ் எழுத்தாளர்களின் நூல்களை, தமிழக அரசு, நாட்டுடமை ஆக்கியுள்ளது. பாவேந்தர் பாரதிதாசனாரின் பிறந்த நாளை ஒட்டி, தமிழக அரசால் கொண்டாடப்பட்ட, தமிழ் வார விழாவின் நிறைவு நாளான இன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சம்பந்தப்பட்ட படைப்புகளுக்கான நூலுரிமைத் தொகையாக, தலா 10 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை, முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், அந்தந்த எழுத்தாளர்களின் குடும்பத்தினருக்கு வழங்கினார். தமிழ் வார விழாப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

*ஜவஹர் சிறுவர் இல்லம்*

புதுச்சேரியில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் ஜவஹர் சிறுவர் இல்லம் மூலமாக நடைபெற்று வரும், கோடைக்கால இலவச சிறப்பு பயிற்சி வகுப்புகளில், 6 முதல் 16 வயதிற்கு உட்பட்ட, சுமார் ஆயிரத்து 500 மாணவ-மாணவிகள் கலந்து கொண்டு, இசை, நடனம், தற்காப்பு

கலைகள், மற்றும் பல்வேறு விளையாட்டுகளை கற்று வருகின்றனர். ஜவஹர் சிறுவர் இல்லத்தில் மட்டுமின்றி, லாஸ்பேட், கதிர்காமம், வில்லியனூர் உட்பட பல்வேறு இடங்களில் உள்ள அரசுப் பள்ளிகளிலும், இந்த பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. கோடை விடுமுறையை வீணாக்காமல் மாணவர்கள் தங்களின் தனித் திறமைகளை வளர்த்துக் கொள்ள, இந்த பயிற்சி வகுப்புகள் உதவிகரமாக இருக்கும் என்று, ஜவஹர் சிறுவர் இல்லத் தலைமை ஆசிரியர் திரு மணிவேல், எமது செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் கூறினார். அவர் மேலும் கூறுகையில்.........

(வாய்ஸ்)

*மின்துறை*

புதுச்சேரி அரசின் மின்துறையில் இளநிலை பொறியாளர் பணியிடங்களுக்கு, வரும் 11-ஆம் தேதி நடைபெறுவதாக இருந்த எழுத்து தேர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. புதிய தேதி பின்னர் அறிவிக்கப்படும் என மின்துறை கண்காணிப்பு பொறியாளர் திரு ராஜேஷ் சன்யால் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

*இளையோர் விளையாட்டு*

கேலோ இண்டியா விளையாட்டுப் போட்டிகளின் ஒரு பகுதியாக, புதுடெல்லியில் இன்று தொடங்கிய துப்பாக்கி சுடும் போட்டிகளின் 10 மீட்டர் ஏர்-ரைபிள் கலப்பு அணிப் பிரிவில், மயங்க் சவுத்ரி-பிராச்சி

ஆகியோர் அடங்கிய அணி தங்கப் பதக்கம் வென்றது. உத்தரபிரதேஷ் அணிக்கு வெள்ளிப் பதக்கமும், டெல்லி அணிக்கு வெண்கலப் பதக்கமும் கிடைத்தன. கேலோ இண்டியா போட்டிகளில், ஷுட்டிங், சைக்கிளிங், மற்றும் ஜிம்னாஸ்டிக் போட்டிகள் டெல்லியிலும், இதர போட்டிகள் பீகாரிலும் நடைபெறுகின்றன. பீகார் மாநிலம் ராஜ்கீர் விளையாட்டு வளாகத்தில் இன்று நடைபெற்ற கபடி போட்டிகளில், உத்தரபிரதேஷ் மகளிர் அணி, 2 புள்ளிகள் வித்தியாசத்தில், தமிழக மகளிர் அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

*ஐபிஎல்*

ஐபிஎல் கிரிக்கெட்டில் இன்று இரவு 7.30 மணிக்கு ஐதராபாத்தில் நடைபெறும் போட்டியில், டெல்லி-ஐதராபாத் அணிகள் மோத உள்ளன. நேற்று தரம்சாலாவில் நடைபெற்ற போட்டியில், பஞ்சாப் அணி, 37 ரன் வித்தியாசத்தில் லக்னோ அணிக்கு எதிராகவும், கொல்கத்தாவில் நடைபெற்ற மற்றொரு போட்டியில், கொல்கத்தா அணி, 1 ரன் வித்தியாசத்தில், ராஜஸ்தான் அணிக்கு எதிராகவும், வெற்றி பெற்றன.

*வானிலை*

தென் தமிழகம் மற்றும் அதனை ஒட்டி பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சியும், தென்னிந்தியப் பகுதிகளின் மேல் வளிமண்டலத்தின் கீழடுக்கில் கிழக்கு மற்றும் மேற்கு திசைக்காற்று சந்திக்கும் பகுதியும் நிலவுவதால், இன்றைய தினம் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும்,

புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கோவை, நீலகிரி, தேனி, திண்டுக்கல், திருச்சி, அரியலூர், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 11-ஆம் தேதி வரை ஓரிரு இடங்களில் மழை நீடிக்கலாம் என்றாலும், பொதுவாக, அதிகபட்ச வெப்ப நிலையில், பெரிய மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவு தான் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக விருதாச்சலம், சீர்காழி, ராமேஸ்வரம் உள்ளிட்ட இடங்களில் தலா 9 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரி நகரப் பகுதியில் 3 சென்டிமீட்டர் மற்றும் பாகூரில் 4 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது. காரைக்காலில் 2 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

*செயற்கை நுண்ணறிவு*

பொறியியல் பயின்றவர்களுக்கு அப்பாற்பட்டு, கலை-அறிவியல், மற்றும், வணிகவியல் பயின்றவர்களும், ஏற்கனவே வேலையில் உள்ளவர்களும், செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம் குறித்து தெரிந்து கொள்ள ஏதுவாக, சென்னை ஐஐடி உயர்கல்வி நிறுவனத்தின் ஸ்வயம் பிளஸ் கற்றல் இணைய தளத்தில், இலவச ஏஐ படிப்புகள் தொடக்கப்பட்டுள்ளன. இப்படிப்புகளில் சேர விரும்புவோர் வரும் 12-ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. நிஜ

உலகின் இயற்பியல் பிரச்சனைகளுக்கு நியூரல் நெட் ஒர்க் மூலமாகவும், வேதியியல் பிரச்சனைகளுக்கு மூலக் கூற்று கணிப்புகளின் மூலமாகவும் தீர்வு காண்பது குறித்தும், கணக்கியல் நடைமுறைகளை பைத்தான் மற்றும் தரவுத் தொகுப்புகள் மூலமாக தானியங்கி மயமாக்குவது குறித்தும் புதிய படிப்புகளில் கற்றுத் தரப்படும். இதன் மூலம் மாணவர்கள் ஈட்டக் கூடிய கிரெடிட் புள்ளிகளை, உயர்கல்வி நிறுவனங்கள், தேசிய கிரெடிட் கட்டமைப்பின் கீழ், கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*பொது விசாரணை*

துன்பச் சூழலில் உள்ள பெண்களின் பிரச்சனைகளை கேட்டறிந்து உடனுக்குடன் தீர்வு காணும் வகையில் தேசிய மகளிர் ஆணையம் புதுடெல்லியில் 5 நாள் மகா மகளிர் பொது விசாரணை முகாம் ஒன்றை தொடக்கி உள்ளது. டெல்லி முதலமைச்சர் திரு ரேகா குப்தா, தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர் திருமதி விஜயா ராஹத்கர் ஆகியோர் இம்முகாமை தொடக்கி வைத்தனர். பல்வேறு மாநிலங்களிலும் ஆணையம் இத்தகைய முகாம்களை நடத்தி வருவதாக திருமதி ராஹத்கர் தமது உரையில் கூறினார். பெண்களின் புகார்கள் மீது ஆணையம் விரைந்து நடவடிக்கை எடுத்து வருவதால், இவ்வாண்டு இறுதிக்குள் எல்லா புகார்களுக்கும் தீர்வு காணப்படும் என்றே தோன்றுவதாக அவர் குறிப்பிட்டார்.

ஷெகாவத்-மாநாடு

உலக அளவிலான கூட்டங்கள், மாநாடுகள், கண்காட்சி மற்றும் ஊக்கத் திட்டங்களை ஏற்பாடு செய்து கொடுப்பதற்கான MICE துறை, விரைவிலேயே, இந்திய பொருளாதாரத்தின் முக்கிய உந்து சக்தியாக மேம்படும் என்று, மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் திரு கெஜேந்திர சிங் ஷெகாவத் கூறி உள்ளார். ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் இன்று நடைபெற்ற, இந்தியாவில் கூடுவோம் மாநாட்டில் உரையாற்றிய அவர் புதுடெல்லி பாரத் மண்டபம், மும்பை ஜியோ உலக மையம் உட்பட உலகத் தரம் வாய்ந்த மாநாட்டுக் கூடங்கள் இந்தியாவில் இருப்பதாகவும், குறைந்த பட்சம் 10 இந்திய நகரங்களை, உலகின் முன்னணி MICE கேந்திரங்களாக மாற்றும் நோக்குடன் அரசு செயல்பட்டு வருவதாகவும் கூறினார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையில் இந்தியா, உலக மக்களை கவரக் கூடிய முக்கிய சுற்றுலா நாடாகவும், உலக அளவிலான நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஏற்ற நாடாகவும் மேம்பட்டு வருவதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/5.5.2025/Script/

------------------------